# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
## Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com


# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவாக நடாத்தப்பெறும் பேச்சுப்போட்டி 2019

**9 வயதுப்பிரிவு**
(01.01.2010 – 31.12.2010 வரையில் பிறந்தோர்)

## தாய்த்தமிழைக் காப்போர்

மானுடத்தின் முதல் மொழி, வையக மொழிகளின் தாய்மொழி, அது தமிழரெம் தாய்மொழி தமிழ். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தனர் எம் முந்தையர். "பொங்கு தமிழுக்கு இன்னல் விளைத்தால் சங்காரம் புரிந்தேனும் எம் தமிழ் காப்போம்" என்று மொழிகாக்கும் பேரவா கொண்டது தமிழினம்.

திட்டமிட்ட வகையில் அந்நிய மொழி எம்மீது திணிக்கப்பட்ட போதும், எம் தாய்மொழியைச் சீரழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் வெகுண்டெழுந்து மொழி காக்கப் போராடி, உயிர் ஈகம் புரிந்தவர்கள் தமிழர்கள். காலங்காலமாகச் சங்கங்கள், கழகங்கள், பள்ளிகள், கலைக்கல்லூரிகள் எனப் பலவகை அமைப்புகள் தமிழ்மொழியைக் காத்து வருகின்றன.

தாய்நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து வாழ்கின்ற வேளையிலும் தங்கள் தாய்மொழியை மறக்காத பண்பாளர்களாக, முத்தமிழைக் கட்டிக் காக்கும் காவலர்களாக ஈழத்தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பன்மொழிகளைக் கற்கின்ற தமது அடுத்த தலைமுறைக்கு, தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கற்கின்ற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப் பெற்றிருக்கிறது.

இந்தப் பணியென்பது, சாதாரணமாகச் சாத்தியமான விடயமல்ல. தாய்நாட்டை மீட்கவும், தாய்மொழியைக் காக்கவும் உயிர் தந்த மாவீரர்களின் ஒப்பற்ற தியாகமும், மொழிப்பற்றோடு இன மான உணர்வு மிக்க பலரின் அயராத உழைப்பும், அர்ப்பணிப்பும் உறுதுணையாய் நிற்க இப் பணி நடந்தேறி வருகின்றது.

தமிழ்மொழியைக் காத்து, வளப்படுத்தி வளர்த்த சான்றோர்கள், தமிழர் வாழும் நாடெங்கும் தமிழ்மொழிக்காக உழைத்திடும் பேராசிரியர்கள், தகைசார் பெரியோர்கள் மற்றும் முதல்வர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், இளையோர்கள் அனைவரையும் நாம் போற்றுகின்றோம்.

பிறமொழிச் சொற்களை விலக்கி எமது பேச்சிலும், எழுத்திலும் தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவோம். "நிலமும், மொழியும், பண்பாடும், கலையும் எமது இனக்கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள்" என்ற தலைவர் மாமாவின் தடம் பற்றித் திடம் கொண்டு தமிழால் உயர்வோம்.

நன்றி,
வணக்கம்.